1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்கள் கருத்தைத் தான் நான் குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட இடங்கள் காப்பாற்றப்படுகிற முயற்சி பலவகைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த முறையில் சைவ மடங்கள் முன்வந்து இப்படிப்பட்ட சைவ சமய வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இத்தகைய இடங்களைக் காப்பாற்றுகிற முயற்சிகளை மேற்கொள்ளலாம். அதில் அறநிலைய பாதுகாப்புத் துறை கவனம் செலுத்தும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, திலகவதியாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். திருவதிகை எங்கிருக்கிறது என்று தெரியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது பன்ருட்டிக்குப் பக்கத்தில் ஒரு மைலில் உள்ளது.

Memorial for Thirugnanasambandar

* 180. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government will purchase the house at Sirkazhi, where Saint Thirugnanasambandar was born and erect a Memorial there?

திருஞான சம்பந்தருக்கு நினைவுச் சின்னம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருஞான சம்பந்தர் பிறந்த சீர்காழியில் உள்ள வீட்டை அரசு வாங்கி நினைவுச் சின்னம் அமைக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அம்மாதிரியான திட்டம் ஏதுமில்லை

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறியது போல், வேறு யாராவது செய்வதாக இருந்தால், அப்படிப்பட்ட இடத்தைத் தடையில்லாமல் எடுத்துக் கொடுப்பதில் அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி நகரப் பஞ்சாயத்து 8-வது வார்டிலுள்ள ஞானசம்பந்தர் தெருவில் 6 என்ற கதவு இலக்கம் இடப்பட்ட வீட்டில் ஞானசம்பந்தர் பிறந்ததாக விசாரணையில் தெரிய வருகிறது. இந்த வீடு கல் கட்டு கோப்பு ஓட்டுவில்லை வீடு. சுமார் 3 வருஷத்திற்கு முன் திருஞான சம்பந்தர் பாரம்பரையைச் சேர்ந்தவர்கள் கும்பகோணம் தாலுக்கா, பகவலி புறத்தில் உள்ள திருமதி லட்சுமி அம்மாள் என்பவரிடமிருந்து ரூ. 10,000-க்கு மேலையூர் தாசில் பண்ணை திருமதி கௌரி அம்மாள் என்பவரால் வாங்கப்பட்டு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் மடத்திற்கு இனும் சாசனமாகக் கொடுக்கப் பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வருகிறது. மேற்படி வீடு அம்மடத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இந்த வீட்டில் திருஞானசம்பந்தர் படமும் ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் படமும் வைத்து ஆராதனை செய்யப்படுகிறது. இந்த வீட்டைச் சீர்படுத்தி தேவாரப் பயிற்சி நிலையமாக ஏற்படுத்த மேற்படி மடத்தினால் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

New Building for the Government High School for Girls, Ambur

* 181. *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a new building for the Government High School for girls, Ambur; and

(*b*) if so, the present stage of the proposal?

ஆம்பூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம்

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆம்பூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பள்ளிக்கு ரூ. 25,000 மதிப்பீட்டில் துணைக்கட்டிடம் கட்ட அரசு ஒப்புதலளித்துள்ளது.